**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No. 814/2023**
**Prosecution Witness**:PW4

| Name | சிவலிங்கம்(PW4) | Caste | |
|---|---|---|---|
| Father's Name | கந்தசாமி | Calling | காவல் உதவி ஆய்வாளர் |
| Village | அவிநாசி காவல் நிலையம் | Religion | |
| Taluk | அவிநாசி | Age | 58 |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **10th day of September 2026** by Thiru. Kulandaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது அவிநாசி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இந்த வழக்கில் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 05.08.2017- ம் தேதி நிலைய தலைமை காவலர் அய்யாதுரை என்பவர் நிலையை அலுவலில் இருந்தபோது திருப்பூர் தீபா மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பெயரில் அங்கு சென்ற உள்நோயாளியாக இருந்த சுந்தரி என்பவரது புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் திரும்பி நிலைய குற்ற எண்.503/2017 சட்டப்பிரிவுகள் 279, 337 IPC- இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கினை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் தயாளன் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

உதவி ஆய்வாளர் தயாளன் இந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நாராயணன், முருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை

விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். 7.8.2017 ஆம் தேதி நிலையம் ஆஜரான எதிரியை கைது செய்து பிணையில் விடுவித்துள்ளார். விபத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு வாகனங்களையும் மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்துள்ளார். 30.8.2017 ஆம் தேதி திருப்பூர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக உதவி பொறியாளர் செந்தில் குமார் என்பவரை விசாரித்து சம்பவ தினத்தன்று அரசு பேருந்துக்கு ஓட்டுநர் மற்றும் நடத்துனர் நியமிக்கப்பட்டதற்கான பணி நியமன சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **அந்த பணி நியமன சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது .** அன்றைய தினமே மோட்டார் வாகன ஆய்வாளர் கனகராஜ் என்பவரை விசாரித்து அரசு பேருந்து மற்றும் இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அரசு பேருந்துக்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.6 ஆகவும்** இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.7 ஆகவும்** குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே திருப்பூர் தீபா மருத்துவமனை மருத்துவர் செந்தில்குமார் என்பவரை விசாரித்து இவ் வழக்கில் காயம்பட்ட சுந்தரி என்பவரின் காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். . அன்றைய தினமே இந்த வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு)**

இவ்வழக்கின் புகார் வாக்குமூலத்திலும், விசாரணை வாக்குமூலத்திலும் அச்சு முதல் தகவல் அறிக்கை 5 வது வரிசையில் குற்ற நிகழ்விடம் ஆட்டோ ஸ்டாண்டு அருகில் சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 க்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். இரண்டு சக்கர வாகனத்தின் பின் பகுதியில் எவ்விதமான சேதாரமோ, பழுதோ ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் புகார்தாரர் கொடுத்த தவறான புகாரின் அடிப்படையில் சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நஷ்டஈடு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் கொடுக்கப்பட்ட புகாரை சரிவர விசாரணை செய்யாமல் ஒருதலை பட்டசமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த

மருத்துவர் காயம் குறித்து எவ்விதமான கருத்துரையும் வழங்க இயலாத என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்குக்காக பின்னிட்டு தயாரிக்ப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |